

புரட்சிப் **பெரியார் முழக்கம்**

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | டிசம்பர் 23, 2021 | புரட்சி 20 | முழக்கம் 43 | விலை: ரூ.3.00

## திருமண வயது 21ஆக உயர்வதை வரவேற்கிறோம்

# சமுதாய விழிப்புணர்வின் மூலமே சட்டத்தைச் செயல்படுத்த முடியும்

பெண்களின் திருமண வயதை ஆண்களுக்குச் சமமாக உயர்த்திட ஒன்றிய அமைச்சரவை எடுத்துள்ள முடிவு வரவேற்கத்தக்கது. அதற்கான உள்நோக்கம் எது என்று ஆராய்வதைவிட சட்டத்தின் நோக்கங்கள் உருவாக்கிடும் தாக்கங்கள் குறித்தே நாம் சிந்திக்க வேண்டும் என்பதே நமது கருத்து. குறிப்பாக, மதச் சிறுபான்மையினராகிய இஸ்லாமிய அமைப்புகள் தங்கள் மதம் விதிக்கும் கோட்பாடுகளுக்கு எதிரானது என்று வாதாடுகிறார்கள். பெண்களுக்கான சமத்துவத்தை சம உரிமைகளை மறுப்பதில் அனைத்து மதங்களுமே ஒன்றுபட்டு நிற்கின்றன. காரணம், மதங்களை உருவாக்கியதும் அதற்கான விதிகளை நிர்ணயித்தவர்களும் ஆண்களாகவே இருப்பது தான். எப்படி, இலக்கியங்கள் எழுதிய ஆண்கள் பெண்களுக்கு மட்டும் கட்டுப்பாடுகளையும் அடங்கிப் போவதையும் 'சமூக ஒழுங்காக' நிர்ணயித்தார்களோ, அதுபோலவே தான் மதங்களும். நாம் வலியுறுத்த விரும்புவதெல்லாம் சட்டங்கள் இயற்றுவது மட்டுமே முழுமையான சட்டத்தின் நோக்கத்தை வெற்றி பெற வைத்து விடாது. சமூகத்தில் அதற்கான விழிப்புணர்வை உருவாக்கி, மக்களிடையே கருத்துருவாக்கத்தை விதைப்பதன் வழியாகவே சட்டங்களின் நோக்கம் இலக்கை அடையும்.

தீண்டாமையை ஒழிக்க கடுமையான தண்டனைகளை உள்ளடக்கிய வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் அமுலில் இருந்தாலும், 'தீண்டாமை'க் கொடுமைகள் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் நீடித்துக் கொண்டு தான் இருக்கிறது. 'ஜாதிக்கு ஒரு சுடுகாடு' இப்போதும் இருப்பதை கடந்த வாரம் உயர்நீதிமன்றம் சுட்டிக் காட்டி, பொது சுடுகாடுகளை உறுதி செய்ய வேண்டும் என்று ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருக்கிறது. தீண்டாமைக்கு வேராக இருப்பது ஜாதி. ஜாதிக்கு அடித்தளமாகி நிற்கும் மதம், மனுதர்மம், புராணங்கள், வேதங்கள் உள்ளிட்ட 'புனிதமாக்கப்பட்ட' பார்ப்பனிய கருத்தியல்களை மக்களிடம் எடுத்துச் சொல்லி விளக்கும்போதுதான் மக்களிடம் ஜாதி எதிர்ப்பு குறித்த புதிய சிந்தனைகளை உருவாக்க முடியும்.

பெரியாரும் பெரியார் இயக்கமும் காலங்காலமாக மக்கள் எதிர்ப்புகளுக்கிடையே இந்தப் பரப்புரையைத் தொடர்ந்து நடத்தியதன் விளைவாகவே ஏனைய மாநிலங்களைவிட ஒப்பீட்டளவில் தமிழ்நாடு ஓரளவு முன்னேற்றப் பாதையில் பயணித்து வருகிறது. ஆனால் பெண்களின் குழந்தைத் திருமணங்களை நியாயப்படுத்தும் 'மனுசாஸ்திரத்தை' எதிர்த்தாலோ, ஜாதிக்கு ஆதாரமான 'வர்ணக் கட்டமைப்பு'களை நியாயப்படுத்தும் கீதை, இராமாயணம் போன்றவற்றை விமர்சித்தாலோ, மதத்தைப் புண்படுத்துவதாகவும், 'இந்து'க்கள் எதிர்ப்பதாகவும் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி போன்ற அமைப்புகள் கொந்தளிக்கின்றன.

சமூகத்தில் 'தீண்டாமை' ஒரு குற்றம் என்று அறிவிக்கப்பட்டாலும் 'மதத்தின்' பெயரால் 'தீண்டாமை', 'பழக்க வழக்கங்கள்' என்ற பெயரில் தடையின்றி பின்பற்றப்பட்டு வருகின்றன. கோயில் கருவறைக்குள் இப்போதும் 'பிராமணர்' மட்டுமே அர்ச்சகராகும் உரிமை உண்டு என்று உச்சநீதிமன்றம் வரை புரோகிதர்கள் செல்வதற்கு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருப்பது 'பழக்க வழக்கம்' என்ற அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட சொற்றொடருக்குள் அடங்கி நிற்கும் 'தீண்டாமை', 'பெண் சமத்துவ மறுப்பு' கருத்துகள் தான்.

இந்து திருமணச் சட்டம், 1955இல் உருவாக்கப்பட்டது. அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்தபோது இந்துக்களிடையே சமத்துவத்தைக் கொண்டு வரும் நோக்கத்தோடு "இந்து சட்டத் திருத்த மசோதா"வைக் கொண்டு வந்தார். வைதீர்களும் ஜனசங்கம்-ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் காங்கிரஸ் கட்சிக் குள்ளேயே இருந்த பார்ப்பன சக்திகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் அம்பேத்கர் தனது அமைச்சர் பதவியையே தூக்கி எறிந்து வெளியேறினார். தொடர்ந்து பிரதமர் நேரு, படிப்படியாக இந்து சட்டத் திருத்தங்களை அமுலாக்கும் முயற்சிகளில் இறங்கினார். அப்போது உருவானதுதான் 1955 'இந்து' திருமணச் சட்டம். அதில் தமிழக முதல்வர் அண்ணா ஆட்சிக்கு வந்தவுடன் கொண்டு வந்த திருத்தம் தான் புரோகிதத்தை விலக்கி வைக்கும் சுயமரியாதை திருமணச் சட்டம்.

1872ஆம் ஆண்டு உருவான கிறிஸ்துவ திருமணச் சட்டம் பெண்களுக்கு 18; ஆண்களுக்கு 21 என்று திருமண வயதை நிர்ணயித்தது. முஸ்லீம்களுக்கான தனிச் சட்டம் ஷரியத் அடிப்படையில் 1937இல் உருவாக்கப்பட்டது. ஆண், பெண் வயதுக்கு வந்து விட்டாலே திருமணம் செய்யலாம் என்று அந்தச் சட்டம் கூறுகிறது. வயது வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. இருவேறு மதப் பிரிவினருக்கிடையே திருமணம் செய்யும் உரிமையை வழங்கும் சிறப்பு திருமணச் சட்டம் 1954இல் உருவானது. அது பெண்களுக்கு 18 ஆகவும் ஆண்களுக்கு 21 ஆகவும் வயது வரம்பை நிர்ணயித்தது. 2006இல் உருவாக்கப்பட்ட குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் பெண்களுக்கு 18 வயதுக்குக் கீழேயும் ஆண்களுக்கு 21 வயதுக்குக் கீழேயும் திருமணம் செய்வதற்கு தடை விதித்தது.

குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்துவிட்டால் வர்ணக் கலப்பைத் தடுத்து விடலாம் என்ற நோக்கத்துடன் பார்ப்பனர்கள் பால்ய விவாகத்தைத் தீவிரமாகப் பின்பற்றினர். 1924இல் இந்திய பீனல் கோடு 375ஆவது சட்டப்படி திருமண வயது சட்டம் கொண்டு வரப்பட்டது. 14 வயதுக்குக் கீழே உள்ள பெண்களைத் திருமணம் செய்வதும் உடலுறவுக் கொள்வதும் "பாலுறவு வன்முறை" என்று சட்டம் கூறியது. நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது இந்த சட்டம். சென்னை மாகாணத்தில் கருத்துகளைக் கேட்ட போது பார்ப்பன பத்திரிகையாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். இதன் பிறகு பெண்கள் திருமண வயதை 13 என்று நிர்ணயித்து சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் அனைத்து மதத்தினருக்கும் பொருந்தும் என்று சட்டம் கூறியது. மீண்டும் மாகாண அரசுகளிடம் கருத்துகள் கேட்கப்பட்டன.

பிப்ரவரி 1,1927இல் ராஜ்சாஹிப் எம்.ஹர்பிலாஸ் சாரதா என்பவரால் இந்து பால்ய விவாக மசோதா மத்திய சட்டசபையில் (அன்றைய நாடாளுமன்றம்) அறிமுகப்படுத்தப்பட்டது. இந்து பால்ய விவாகத்தைக் கட்டுப்படுத்தவும், 11 வயதுக்கு முன் திருமணம் செய்து வைப்பது தவறு என்றும் உணர்த்துவதே இந்த மசோதாவின் குறிக்கோளாகும். இந்த மசோதா இந்துக்கள், பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், புத்த மதத்தினர், சமண மதத்தினர் மற்றும் சீக்கியர்கள் என்று அனைவருக்கும் பொருந்தும். இந்து மதத்தைச் சேர்ந்த ஆணுக்கு 15 வயதும், பெண்ணுக்கு 12 வயதுமே திருமணத்திற்கு உகந்த வயது என்றும் இதற்கும் இளையவர்களாக இருப்பின் அத்தகைய திருமணம் செல்லுபடியாகாது என்றும் இந்த மசோதாவில் முடிவெடுக்கப்பட்டது. பதினொரு வயது நிரம்பிய பெண்ணுக்கும் திருமணம் செய்ய வேண்டுமென்றால், நீதிபதியின் சிறப்பு அனுமதி பெற்று திருமணம் செய்து வைக்கலாம் என்று சிறப்புச் சலுகையும் அளிக்கப்பட்டது. ஆனால் அப்பொழுதும் பெண்ணுக்கு 11 வயது கட்டாயம் நிரம்பி இருக்க வேண்டும். 1927 செப்டம்பர் 15இல் சட்டசபையில் இந்த மசோதா ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த மசோதாவின் காரணகர்த்தாவாகிய சாரதா, 'பால்ய விவாக' முறையை ஒழிப்பதே இதனுடைய முதன்மைக் கொள்கை என்று தெரிவித்தார்.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியால் மார்ச் 27, 1928இல் மதராஸ் சட்ட ஆலோசனை சபையில், அச்சபையினரின் முழு ஆதரவோடு திருமண வயது அதிகரிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சட்டசபை உறுப்பினர்களுக்கும் கவர்னர் ஜெனரல் அவர்களுக்கும் ஒரு சுருக்கமான குறிப்புக் கடிதம் இவரால் அனுப்பப்பட்டது. அக்கடிதத்தில் சாரதா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட மசோதாவிற்குச் சென்னை மாகாணத்தில் உள்ள அனைத்துப் பெண்கள் சங்கங்களும் முழு மனதோடு ஒத்துழைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுவிக்கப்பட்டது. ஆகஸ்ட் 31, 1929இல் திருவல்லிக்கேணியில் உள்ள இந்து பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நிகழ்த்தப் பெற்ற ஒரு பெண்கள் பொதுக் கூட்டத்தில் இந்தக் குறிப்பானது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஏப்ரல் 1,1930இல் 'பால்ய விவாகத் தடை' அரசின் நீதியாக மாற்றப்பட்டது. 1929இல் இந்தியா முழுவதும் சட்டம் அமுலானது. ஆணுக்கு 18 என்றும் பெண்ணுக்கு 14 என்றும் திருமண வயது நிர்ணயிக்கப்பட்டது. இந்தச் சட்டத்தை மீறுவோருக்கு 1000 ரூபாய் அபராதம், ஒரு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தச் சட்டம் இந்து கிறித்துவர் மற்றும் முஸ்லிம் என்று அனைவருக்கும் பொருந்துவதாக இருந்தது.

இப்படி மதவாதிகள், பார்ப்பனிய சக்திகளின் தடைகள் எதிர்ப்புகளைத் தாண்டி சட்டங்கள் வந்தாலும் இப்போதும் 'பால்ய விவாகங்கள்' தொடரவே செய்கின்றன.

21 வயது என்பது ஒரு பெண்ணின் கல்வி ஓரளவு முழுமையடைவதற்கும் அவர்களின் மனநிலையில் முதிர்ச்சி ஏற்படுவதற்குமான ஒரு பருவம் என்ற கண்ணோட்டத்தில் இந்தச் சட்டம் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். 'நாடகக் காதல்' என்று கூறி ஜாதி அடையாளத்தைக் காப்பாற்றும் ஆணவக் கொலைகள் நடந்து வருகின்றன. தேசிய குடும்ப ஆரோக்கியக் கணக்கெடுப்பு (2019-2021) தரும் புள்ளி விவரங்கள் குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் அமுலில் இருந்தும் 23.3 சதவீதப் பெண்கள் 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்து வைக்கப்படுகிறார்கள் என்று கூறுகின்றன.

எனவே சட்டங்கள் நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டாலும் சட்டத்தின் நியாயங்களை மக்களிடம் பரப்பி, மக்களை ஏற்கச் செய்யும் சமூக விழிப்புணர்வை உருவாக்காவிட்டால் சட்டம் காகிதத்தில் மட்டும் தான் இருக்கும். பரப்புரைக்கான கருத்துச் சுதந்திரத்தை மறுக்காமல் மாற்றங்களை நோக்கி சமூகத்தை முன் நகர்த்துவதற்கு அரசியல் கட்சிகள் தயாராக இல்லை. இந்த நிலையில் பெரியாரிய இயக்கம், முற்போக்கு சிந்தனை இயக்கங்கள் மனித உரிமை அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள், பெண்கள் உரிமை இயக்கங்களின் பரப்புரைக்கு வழியமைத்துத் தர சட்டத்தை உருவாக்கியவர்கள் முன் வர வேண்டும்.

மதவாதப் பிற்போக்குச் சிந்தனைகளைப் புறந்தள்ளித் தான் பெண்களுக்கான உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும் என்ற அடிப்படைப் புரிதல் இல்லாமல் சட்டத்தை மட்டும் இயற்றி விட்டால் அதனால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை. புதிய சட்டத்தை நாம் வரவேற்கிறோம். அதே நேரத்தில் சட்டத்தின் நியாயங்களை மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பது முக்கியம் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

**– 'இரா'**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 23.12.2021**

## மூவருக்கும் நன்றி

மூன்று பேருக்கு நன்றி தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். ஒருவர் காஞ்சி சங்கராச்சாரி விஜயேந்திரர். மற்றொருவர் மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன். மூன்றாமவர் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை. இந்த மூவருடைய முயற்சியின் காரணமாக இப்போது நல்ல பயன் ஒன்று கிடைத்திருக்கிறது. காஞ்சி சங்கராச்சாரி நிகழ்ச்சி ஒன்றில் பேசும் போது தமிழ்த்தாய் வாழ்த்து பாடுகிறபோது எழுந்து நிற்காமல் உட்கார்ந்திருந்தார். சுவாமி தியான நிலையில் இருந்தார் என்று அப்போது காரணம் கூறப்பட்டது. இதை எதிர்த்து தமிழ் உணர்வாளர்கள் தொடர்ந்த வழக்கு மதுரை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.ஆர் சுவாமிநாதன் தமிழ்த்தாய் வாழ்த்து என்பது இறை வணக்கப் பாடல் தான். அது தேசியகீதம் போல நாட்டு வணக்கப் பாடல் அல்ல. சங்கராச்சாரி போன்ற மிகப் பெரிய மகான்கள் அமர்ந்த நிலையில் இறை வாழ்த்து பாடுகிறபோது தியானத்தில் இறைவனைத் தேடிக் கொண்டிருக்கலாம். அதற்கு அனைவரும் எழுந்து நிற்க வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இல்லை; சட்டமும் இல்லை என்று ஒரு தீர்ப்பை வழங்கினார். அடுத்த இரண்டு நாட்களில் தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு அரசாணையை பிறப்பித்தார். தமிழ்த்தாய் வாழ்த்து என்பது இறை வணக்கப் பாடல் அல்ல. அது தமிழ்நாட்டுக்கு உரிய பாடல். தமிழ்நாட்டு அரசு நிகழ்ச்சி அனைத்திலும் துவக்கப் பாடலாக அதைப் பாட வேண்டும். அது மட்டுமின்றி அந்தப் பாடலை பாடும் போது அனைவரும் கட்டாயம் எழுந்து நிற்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள், கர்ப்பினிப் பெண்களுக்கு மட்டும் விதிவிலக்கு கொடுக்கப் பட்டுள்ளது என்று தெளிவான விளக்கத்தோடு தமிழ்நாடு அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்படி ஒரு அரசாணை வருவதற்குக் காரணமான காஞ்சி சங்கராச்சாரி, மதுரை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதன் ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி சொல்ல வேண்டிய மற்றவர், தமிழ்நாடு பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை. அவர் தமிழ்த் தாய் வாழ்த்தில் வெட்டப்பட்ட வரியையும் இணைத்துப் பாட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்திருந்தார். திராவிடம், ஆரியம் என்ற ஒன்று கிடையாது; இது பாரத தேசம், நாமெல்லாம் பாரதத்தின் புதல்வர்கள் என்று பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ்.யும் பேசிக் கொண்டிருக்கும் வேலையில் 'இல்லை, இல்லை திராவிடத் திருநாடு மிகச் சிறந்த நாடு' என்ற வெட்டப்படாத வரியை அண்ணாமலை ஆதரிக்கிறார் என்றால் அதை நாம் வரவேற்கத் தானே வேண்டும்.

அதே போல் நீக்கப்பட்ட பாடலில் மற்றொரு வரி "ஆரியம் போல் உலகு வழக்கு ஒழிந்து, சிதையாத உன் சீர் இளமை திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துமே" என்ற வரிகளும் சேர்க்கப் பட வேண்டும் என்று அண்ணாமலை கூறுகிறார். ஆரியம் உலக வழக்கிலிருந்து அழிந்து போய் விட்டது. சமஸ்கிருதம் மடிந்து போய்விட்டது. ஆனால் தமிழ் மொழி இன்றும் இளமையுடன் இருந்து கொண்டிருக்கிறது என்று பாடல் வரிகள் கூறுகின்றன. சமஸ்கிருதமே பாரதிய கலாச்சாரம் என்று பேசிக் கொண்டிருக் கின்றனர் பா.ஜ.கவும், சங்பரிவாரங்களும். அந்த ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. கொள்கைகளை நான் ஏற்க மாட்டேன். தமிழ் மொழியைப் போல் இளமையான வேறு மொழி இல்லை. ஆரியம் வழக்கு ஒழிந்து விட்டது என்ற கருத்துக்கும் வலிமையான ஆதரவைத் தந்திருக்கும் அண்ணாமலைக்கும் நாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வரிகளை தமிழக அரசு மீண்டும் இணைத்தால் ஒன்றிய ஆட்சியோ பா.ஜ.க. பரிவாரங்களோ ஒருபோதும் எதிர்க்காது என்று ஒன்றிய அரசு வழியாக அறிவிக்கச் சொல்வாரா அண்ணாமலை என்ற கேள்வியையும் எழுப்ப விரும்புகிறோம்.

ஒரு பெரியாரியல்வாதி பார்வையில் தமிழ்த் தாய் வாழ்த்து, கடவுள் வாழ்த்து என்பவை அர்த்த மற்றவை என்றாலும் தமிழை நீச மொழியாகக் கருதும் பார்ப்பன சங்கராச்சாரிகளின் ஆணவத் துக்கு எதிர்வினை என்ற கண்ணோட்டத்தில் தமிழக அரசின் ஆணையை நாம் வரவேற்கிறோம்.

# சீமானின் 'செருப்பு வீரம்'

'செருப்பால் அடிப்பேன்; காலால் உதைப்பேன்' என்று பேசுவது அவமானமா என்று கேட்டார், ஒரு தோழர். அவர் கேள்வியிலும் நியாயம் இருக்கிறது. உடலில் தலையிலிருந்து கால் வரை அனைத்து உறுப்புகளும் சமமானவை தானே? தலை மட்டும் உயர்ந்தது? கால் கீழானதா? அது எப்படி? உடலையே சுமந்து நிற்பது கால் தான். காலில் போடும் செருப்பு, அந்தக் காலுக்கு பாதுகாப்பு. பிறகு ஏன் செருப்பால் அடிப்பது என்பது இழி சொல்லாக மாறியது?

தலையில் பிறந்தவன் பிராமணன்; காலில் பிறந்தவன் 'சூத்திரன்' அடிமை என்று மனுசாஸ்திரம் கூறி வைத்தது தான் இதற்கான காரணம். அப்படித் தான் இருக்க முடியும். 'பகவானின் பாதார விந்தத்தை' சரணடைகிறேன் என்று பக்தர்கள் உருகி உருகிப் பாடியிருக்கிறார்கள். பகவான் காலுக்கு அவ்வளவு பெருமை இருக்கும்போது அதே காலிலேயே பிறந்ததாகக் கூறும் சூத்திரனை மட்டும் ஏன் இழி பிறவி என்று கூறுகிறீர்கள் என்று ஒரு கேள்வியை பெரியார் கேட்டார்.

பழந்தமிழன் பெருமை; பழந் தமிழர் வீரம், பழந் தமிழர் பண்பாடு என்று மேடைகளில் உடலை வளைத்து கைகளை முடக்கி, நீட்டி முழங்கி 'கோடை இடியாகக்' குமுறுகிற ஒருவர் தன்னை 'சங்கி' என்று எவனாவது கூறினால் செருப்பால் அடிப்பேன் என்று செருப்பைக் கழற்றிக் காட்டியிருக்கிறார்.

கீழ் ஜாதிக்காரன் காலில் செருப்பு போடக் கூடாது; தோளில் துண்டு போடக் கூடாது; சட்டை போடக் கூடாது; இப்படித் தான் அடங்கி ஒடுங்கிக் கிடந்தனர் நமது 'வீரம்' பேசிய பழந்தமிழர்கள். சங்க இலக்கியப் பாடல் களுக்கு ஓவியம் தீட்டும் ஓவியர்கள்கூட சட்டை இல்லாத திருமேனியோடுதான் பழந்தமிழர்களை இப்போதும் அடையாளப்படுத்துகிறார்கள். நமது 'கற்புக்கரசி' கண்ணகிகூட அந்தக் காலத்தில் 'ரவிக்கை' போட முடியாத 'தமிழச்சியாக'வே இருந்திருக்கிறார். ரவிக்கை அணிந்தார் என்பதற்கு இலக்கியச் சான்று இல்லை என்கிறார்கள் தமிழ்ப் புலவர்கள்.

காலில் செருப்பைப் போடு; உடம்பில் சட்டையைப் போடு; தோளில் துண்டைப் போடு என்று போராட்டங்கள் நடத்தித் தான் பழந்தமிழன் தன்மானத்தையும் வீரத்தையும் மீட்க வேண்டியிருந்தது. நீ எதைப் போட்டால் என்ன? சாதியை ஒழிக்க ஏதேனும் சட்டையோ, செருப்போ இருக்கிறதா என்ற கேள்வியும் இப்போது கேட்க வேண்டியிருக்கிறது.

செல்வக்குடியில் பிறந்து அரண்மனையில் தவழ்ந்து விளையாடி வெள்ளிக் குவளையில் பால் அருந்தும் பரம்பரையில் வந்த செல்வச் சீமான்கள் மேடையிலேயே செருப்பைத் தூக்கிக் காட்டுகிறார்கள். காட்டப்பட்ட செருப்பில் 'கருப்பு- சிவப்பு' வண்ணம் தான் பளிச்சிட்டது.

தமிழ்நாட்டில் இந்த அரண்மனைச் சீமான்கள் மேடையில் எதை வேண்டுமானாலும் காட்டலாம்; தமிழ்நாட்டில் யார் வாழலாம்; யார் வாழக் கூடாது என்பதை தீர்மானிக்கலாம். நான் ஆட்சிக்கு வந்தால், எதை வேண்டுமானாலும் செய்வேன் என்று பறைசாற்றலாம். அவரை ஆட்டவோ அசைக்கவோ முடியாது. தமிழ்நாட்டில் அவர் உயரத்தை எட்டிப் பிடித்த 'புரட்சியாளர்கள்' இன்னும் பிறக்கவில்லை.


வாய்ப் பேச்சு வீரத்தாலும் போர் முழக்க இடியோசையாலும் தமிழ் நாட்டையே தனது காலடிக்குள் வைத்துக் கொண்டிருப்பவர் அவர். எதிர்த்தால் அவரது செருப்பு தான் பேசும் என்கிறார். உண்மை தான். அவரது வீரம் செறிந்த பேச்சால் நடுங்கிப் போன அவரது கட்சித் தமிழர்கள் 3000 பேர் அவரது கட்சிக்கே முழுக்குப் போட முடிவு செய்து சீமான் வீரத்துக்கு பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

செருப்பைக் காட்டும் சீமான் கட்சியி லிருந்து விலகி செருப்பு போடும் உரிமைகளுக்குப் போராடிய திரவிட இயக்கமான தி.மு.க.வில் இணையப் போவதாக அறிவிப்பை வெளியிட்டிருக் கிறார்கள்.

இனி 3000 பேருக்கும் எதிராக செருப்புகளை சீமான் தயார் செய்ய வேண்டியிருக்குமே! அவர் தயாரிப்பார்; அவர் தான் அசைத்துக் கூடப் பார்க்க முடியாத அரண்மனையில் பிறந்து தமிழ் நாட்டையே தனது கால் செருப்புக்குள் வைத்திருக்கும் தமிழர்களின் ரட்சகர் ஆயிற்றே!

– கோடங்குடி மாரிமுத்து

## மிகவும் சிரமமான கேள்வி !



**பகுத்தறிவுவாதி :** கடவுள் எத்தனை உண்டு ?

**ஆத்திகன் :** ஒரே கடவுள் தான் உண்டு.

**பகுத்தறிவுவாதி :** இவ்வளவு மதங்களும் யாருக்காக உருவாக்கப்பட்டது ?

**ஆத்திகன் :** மனித வர்க்கத்திற்காகத்தான்.

**பகுத்தறிவுவாதி :** மதத்தால் ஏற்படும் பயன் என்ன ?

**ஆத்திகன் :** மனிதன் கடவுளை அறியவும், கடவுளுக்கும் தனக்கும் சம்மந்தம் ஏற்படுத்திக் கொள்ளவும், ஆத்ம ஞானம் பெறவும், கடவுள் கருணைக்குப் பாத்திரனாகவும் பயன்படுவதாகும்.

**பகுத்தறிவுவாதி :** அப்படியானால் ஒரே கடவுள் ஒரே மனித வர்க்கத்துக்கு இத்தனை மதங்களை ஏற்படுத்துவானேன் ?

**ஆத்திகன் :** இது மிகவும் சிரமமான கேள்வியாக இருக்கிறது. பெரியவர்களைக் கண்டு பேசிய பிறகு பதில் சொல்லுகிறேன்.

– பகுத்தறிவு -1938

('சித்திரபுத்திரன்' என்ற புனைப்பெயரில் பெரியாரால் எழுதப்பட்ட நீண்ட உரையாடலின் சிறு பகுதி)

## இளைய தலைமுறை பெரியாரியலை எப்படிப் புரிந்து கொள்ள வேண்டும்? (3)

# புரோகித ஆதிக்கத்தின் மாறாதப் போக்கை உணர்ந்து அஞ்சாது கட்டுடைத்தவர் பெரியார்

*பார்ப்பனியம் என்ற அரசியல் சமூகக் கோட்பாட்டை தகர்க்க பெருந்திரளான மக்களிடம் படிந்து நிற்கும் உளவியலுக்கு எதிரான கருத்தியலைக் கட்டமைக்க வேண்டும் என்று பெரியார் சரியாக சிந்தித்தார்.*

*புராணப் புரட்டு – பனிப் போரின் பெருமைகளை மக்கள் மொழியில் போட்டுடைத்ததன் விளைவாக பார்ப்பனியம் தனக்காக நிலைநிறுத்திக் கொண்ட உயர்தனிப் பெருமைகள் சிதையத் தொடங்கின.*

பூபாலன்

மானுடகுல படிமலர்ச்சியில் வேட்டை சமூக காலம் முதல் எந்திரங்களை சிந்திக்கச்செய்யும் இன்றைய செயற்கை நுண்ணறிவு காலத்திலும், உலகமெங்கும் ஒரு சமூகமென்பதின் அடிப்படை அலகான தனிமனித மனங்கள் மீதான உண்மையான அதிகாரம் என்பது புரோகித வர்க்கத்திடமே (Pontifex Class) இன்றும் குவிந்துள்ளது என்பதை எளிதில் உணரமுடியும். இது நவீன அமைப்பியல் கருத்தியல்களான சமூகம், அரசதிகாரம், படைத் துறை, பொருளியல் உற்பத்தி என்பவை தாண்டிய தனிமனிதன அகநிலையை கைக்கொள்ளும் அதிகாரம்.

இந்த அதிகாரம் செயல்படும் புள்ளி என்பது ஒவ்வொரு தனித்த அகத்தின் ஆதி அச்சம் சார்ந்தது. இது மனித மனங்களுக்கானது மட்டுமானதல்ல அனைத்து உயிர்களுக்குமான அச்சம். இதன் ஆழ்நிலை என்பது தன் பௌதீக இருப்பு குறித்த இயற்கை மீதான அச்சம். இந்த அச்சத்தை அதிகாரக் கைப்பற்றலுக்கு பயன்படுத்தும் தன்மையை எல்லா உயிரின சமூகங்களுக்குள்ளும் காணமுடியும். ஆனால் அதை ஒரு முறைப்படுத்திய தன்மையில் தீவிர நடைமுறையாக்கி அதிகாரக் கைப்பற்றலுக்குப் பயன்படுத்தியது, மனிதசமூகம் மட்டுமே. வேட்டைச் சமூகத்தில், அச்சம் மறுத்து இருள்குகைக்குள் சென்று திரும்பிய ஒரு மனிதனின் பௌதீக இருப்பு, அவனை; அந்தச் சமூகத்தின் மேம்பட்ட உயிரியாக்கி வணங்கத் துவங்கியதில் தோன்றியது புரோகித வர்க்கம் (Pontifex Class). இந்த வர்க்கம் வரலாறு நெடுகிலும், இந்த அச்சத்தை தன் தேவைக்கேற்ப வளர்த்தெடுத்து தன் சமூக அதிகாரத்தை தக்க வைக்கிறது. இது மானுடகுலம் முழுமைக்குமான பொதுமைத் தன்மையானாலும். உலகம் முழுதும் காலம் நெடுகிலும், இந்த புரோகித வர்க்க அதிகார கைப்பற்றல் மாறிக்கொண்டே வந்துள்ளது. இந்திய நிலப்பரப்பில் ஒரு பெரிய பரந்துபட்ட புரோகித வர்க்க சமூக அதிகாரக்க கைப்பற்றல் என்பது என்றும் மாறாத்தன்மை கொண்டதான ஒரு சிறப்பு (Peculiar) பண்பைக் கொண்டதாக உள்ளது. இதுவே மானுடவியல் நோக்கில் ஆய்வுக்குள்ளாக்க வேண்டிய மிக தீவிரமான பகுதி.

இந்திய நிலப்பரப்பின் இந்தப் புரோகித சமூக அதிகாரத்தின் மாறாத் தன்மையை சிந்தித்ததில் பெரியார் கவனிக்கப்பட வேண்டியவர். இந்த மாறாத் தன்மையை ஒரு குழப்பமாக அஞ்சாமல் அதன் உடைவு நோக்கி பேசியதில் அவர் ஒரு தெளிந்த சிந்திப்புக்கொண்ட செயற்பாட்டாளராகிறார்.

இங்கு, பார்ப்பனியம் என்பது தன்னை (ஞநடக) விட பிற (other) அனைத்தையும் மறுத்து தாழ்வாக்கி பிறனின் பௌதீக இருத்தலையே தீமை என்பதாக்கி சுரண்டி அழிக்கப்பட வேண்டியது என தானும் உணர்ந்து கொண்டு, சுற்றி இருக்கும் அனைத்து மனங்களையும் அதை நோக்கி இழுத்து சமூகம் முழுமைக்கும் எப்பொழுதும் ஒரு வெறுப்பை, ஏற்றதாழ்வை தக்கவைத்துக்கொள்ளும் பேரழிவு சிந்தாந்தம் (Destructive Ideology). இது அதிகம், இந்திய நிலப்பரப்பின் இளம் மனங்களுக்குள் திணிக்கப் படுவது புரோகிதம் வழியான பக்தி உணர்ச்சி வழியாகவே.

ஒரு நாடு, அந்த நாட்டை ஆளும் அதிகாரவர்க்கம், தனக்கான தேசிய குடிமக்களை உருவாக்க சில உணர்ச்சிகர தளங்களை உருவாக்கி அதை ஒரு இயல்வாழ்வியல் நடைமுறையாக்கி, அறியாமலே தனித்த மனங்களை கட்டுப்படுத்தி; தன் தேவைக்கேற்ப பயன்படுத்தத் துவங்கும். உதாரணம் எல்லா நாடுகளிலும் பள்ளிக்குழந்தை மனங்களில் தேசியகீதம் பாடுவதை ஒரு நடைமுறையாக்கி; தேசியம் (Nationality) மீதான நம்பிக்கை விதைத்து அந்த இளம்மனத்தை அது உணரவலாமே உணர்ச்சியால் கட்டமைத்து நன்மையாகவோ தீமையாகவோ பயன்படுத்திக் கொள்வது (இந்திய தேசிய உணர்ச்சியின் நன்மை, நடைபெற்ற குடியுரிமை சட்ட திருத்தத்திற்கு எதிராக இந்தியா முழுமையும் நிகழ்ந்த போராட்டங்கள், அதே உணர்ச்சியின் தீமைப் பயன்பாடு அதே தேசிய உணர்ச்சி வழி ஹிந்து ராஜ்யா என முழங்கியபடி தனி மனிதர்களை தீயிட்டு கொளுத்துவது).

“இந்திய நிலப்பரப்பின் இளம் மனங்களை கட்டமைக்கும் இயல்பை; எந்தச் சலனமுமற்று சமூக அமைப்பின் அடிப்படை அலகான குடும்பத்திற் குள்ளேயே அதன் உறுப்பினர்களாலே கட்டமைக்கும் வழியை உருவாக்கிக் கொண்ட திலேயே பார்ப்பனியம் இந்த மண்ணில் இன்றும் நீடிக்கிறது. ஆம், உயர்குடி என்று தங்களை நம்பிக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் உருவாக்கும் வழிபாட்டு நடைமுறைகள் இந்திய நிலப்பரப்பின் பெருவாரி குடும்பங்களுக்குள்; உயர்வானதாக நம்பவைக்கப்படுவதில் ஒரு குழந்தையின் மனதிற்குள் பார்ப்பனியம் என்ற மனவியல் கட்டமைப்பு அதன் அருபத்தன்மையில் விதைக்கப்படுகிறது. ‘பிராமண’ வழிபாட்டு நடைமுறையில் இருக்கும் ஆடம்பர அழகியலை (Luxurious Aesthetics) உள்ளேற்றிக் கொள்ளும் ஒரு குழந்தை இயல்பிலே ஆடம்பரமற்ற எளிய இயற்கையின்பாற்பட்ட பண்பாட்டு வழிபாடுகளை ஏற்கும் உற்சாகமற்று, அதை தாழ்வுற்றதாய் நம்பிக்கொள்கிறது. இதிலிருந்து ஒரு இந்தியக் குழந்தையின் மனத்தில் மேல், கீழ் உருவாக்கப்பட்டு தன்னிலிருந்து பிறனை (Other) விலக்கும் தீண்டாமையை இயல்பாக்கிக் கொள்கிறது. இந்தக் குழந்தை மனம் முதிர முதிர இன்னும் சரிசெய்ய முடியாததாகி ஆதிக்கப் பெருமிதம் கொண்டு குற்ற உணர்வற்று பிறனை சுரண்டுதல் என்பதாக; அப்படியே அடுத்த தளத்தில் விரிந்து, ஒரு சமூக கட்டமைப்பாகி ஒரு மனிதன் தன் சக மனிதனிடம், ஓர் ஆண் ஒரு பெண்ணிடம், ஒரு சாதி இன்னொரு சாதியிடம் என எங்கும் அதிகாரம் பரவலாகும் சம உரிமை என்னும் சாத்தியப்பாட்டை இல்லாமல் ஆக்கி படிநிலை சமமின்மை (Graded inequality) மனநிலையாக விரிகிறது. இதை வர்ணாசிரமம், ஒரு தனிமனித குழந்தை மனம் உருவாக்க அடித்தளத்தி லிருந்து செயல்படும் சிந்தனை அமைப்பாக (School of Thought) போலியான குடும்ப ஆன்மிக வழிபாட்டு நம்பிக்கை வழி உருவாக்கி வைத்துள்ளது. இதுவே இன்றும், சாதியத்தை இந்திய நிலப்பரப்பிற்குள் தக்கவைத்துக் கொண்டிருகிறது. இந்த சிந்தனை முறைமையை (School of Thought) உடைக்கவே; பெரியார், கடவுள் வழிபாட்டு மறுப்பை கையிலெடுக்கிறார்.

இங்கு மனித மனங்கள் பாகுபடுத்தப்படுவது பெரிய சுரண்டல் அடிமை வணிகம் (Slavery trade). இதற்காகவே, இங்கு இத்தனை சாதிப்பிரிவுகள், மேல் கீழ் மனநிலை உருவாக்கம் என கண்டறிந்ததோடு; மானுடத்தின் சரிபாதி தொகையில் இருந்துகொண்டு, மேற்சொன்ன எந்த படிநிலைகளுக்குள்ளும் வராமல் உலகின் அனைத்து படிநிலைகளுக்கும் கீழாய் தாழ்வுற்று நிறுத்தப்பட்டிருக்கும் பெண்களின் மனநிலையை தட்டி எழச்சொல்லி, இன்னும் உரக்கப்பேசி எழுதியதாலே பெரியார், ஒரு சமூகவியலறிஞராகிறார்.

தீவாய்ப்பாக, வெறும் அரசியல் பரப்புரை கருத்துருவமாக மட்டுமே ஏற்பவர் மறுப்பவர் என இருதரப்பாலும், பெரியார்; இங்கு உள்வாங்கப்பட்டுள்ளார். ஆனால் இந்தியச் சிந்தனை மரபில் இருபதாம் நூற்றாண்டின் தவிர்க்க முடியா கண்ணி பெரியார். கருப்புச்சட்டையோடும் புரளும் வெண்தாடியோடும் பெரியார் என இன்று அமர்ந்திருக்கும் அந்த உருவம் நிகர்மைச்சமூகம் (ளூடிஉயைடளைவைந ளூடிஉநைவல) என்ற அரசியல் கருத்துருவின் இந்திய வடிவம். மானுட சமத்துவத்தையும், சமூகம் முழுமைக்குமான அதிகாரப் பரவலாக்கத்தையும் ஏற்கொள்ளும் பக்குவமற்று தான் மட்டும், தான் சார்ந்த மட்டுமென வேட்டைச் சமூக நிலையிலேயே நின்றுவிட்ட மனங்களை உள்ளூர தொந்தரவு செய்து உரையாட அழைக்கும் பெருங்கருத்துருவம் பெரியார்.

சக மனிதனை தனக்கு இணையாக இருத்தமுடியாத, சமூகக் கீழ்மையை புரிந்து கொள்ளவே முடியாமல் இருந்த பொது மன வெளிக்குள்; அந்தக்கீழ்மை நோக்கிய சிந்தனை துளியேனும் தோன்றியதற்கு காரணமான பெரியாரின் சமரசமற்ற சமூகச்செயற்பாடுகள் இந்தியச் சமூக வரலாற்றில் மிகப்பெரும் சாதனை. இந்தப்புள்ளியில் பெரியார், சகமனிதனை தனக்கு இணையாக எண்ணும் அனைத்து மனங்களுக்கும், ஓர் ஆற்றலூட்டும் சிந்தனை.

இங்கு, புனிதப்படுத்தப்படும் எதுவும் ஒரு நிலையில் தேங்கிப்போய் அதிகார குவிப்பாகி வன்முறை சுரண்டலாக மாறிப்போகும். இது அனைத்து சிந்தனைகளுக்கும் காலப்போக்கில் நிகழும் சிக்கல். ஆனால், எந்த நிலையிலும் ஏற்பவரோ மறுப்பவரோ பெரியாரை, அவரது கருத்துக்களை தத்துவப்படுத்த முடியாது. ஏனெனில் பெரியாரும் அவரது கருத்துக்குகளும் தன்னியல்பில் உள்ளூர புனிதப்படுத்துதலுக்கு எதிரானவர்கள். இந்தப் பண்பே ஒரு பாய்ம நிலையில் பெரியாரை எங்கும் தேக்கமுறா தன்மையில் நீட்டித்து உரையாடவைக்கிறது.

ஏறக்குறைய காந்தியும், பெரியாரும் ஒரே காலத்தில் சமூக அரசியலுக்குள் நுழைந்தவர்கள். சற்று ஆழ்ந்து யோசிக்கையில் காந்தியும் பெரியாரும் ஒற்றைச் சமூக இலக்கை நோக்கி இரு எதிரீட்டு வழிமுறைகளில் பயணித்த ஆளுமைகள். ஆம், காந்தி ஆழமான தனிமனித ஆன்மீக தேடல் வழியான சமூகம் பண்படும் ஒரு விடுதலை என்பதாக தனிமனித தன்னகவிழிப்பு நோக்கில் சிந்திக்கிறார். பெரியாரும் அதே தனிமனித சுயம் என்ற அகவிழிப்பின் வழியான சமூக மாற்றத்தை பேசுகிறார். காந்தி ஒவ்வொரு மனிதனும் மகாத்மாவாகும் சமூகத்தை கனவு செய்கிறார். இது ஏறக்குறைய நீட்ஷேவின் அதி மனிதன் என்ற கனவிற்கு ஒப்பானது. பெரியார் அதே போன்றதொரு உன்னத சமூகத்தை ஒரு மனிதன் எளிமையாக தன் சுயத்தை உணரும் இயல் மனித நிலையிலே எட்டிவிடும் சாத்தியங்களை பேசுகிறார். இன்னும் அடுத்த நிலையில் இந்திய நிலப்பரப்பின் வரலாற்றில் மார்க்ஸிய இயக்கங்களும், காந்திய இயக்கமும், பெரியாரின் சுயமரியாதை இயக்கமுமே பெருந்திரளாய் எளிய மனிதர்களை, குறிப்பாக பெண்களை தங்கள் குடும்ப வேலிதாண்டிய பொதுவெளிக்குள் கொணர்ந்து அரசியல்மயப்படுத்திய சமூக இயக்கங்கள். மேற்சொன்ன, அந்த அதிமனிதர்களின் தொகை குறையும்போது காந்திய அரசியல் அமைப்புக்கள் தளர்ந்து சிதைவுறத்துவங்குகிறது. இயல்மனிதர்களை கொண்டியங்கும் தன்மை கொண்டதாலே மார்க்ஸிய, பெரியாரிய அரசியல் அமைப்புக்கள் எப்போதும் எளிய மனிதர்களை கொண்டு தன்னை தக்கவைத்துக்கொள்ளும் தன்மை கொண்டுதாயுள்ளது.

இன்னும் ஆழ்ந்து நோக்குகையில் காந்தியம் விழையும் அதிமனித சமூகத்தை அடையும் எளிய பாதையாக பெரியாரியம் வாய்ப்புக் கொண்டுள்ளது. ஒரு சமூகத்தின் உற்பத்தியில், கல்வியில் அதிகாரப் பகிர்வில் அனைவருக்கு சமவாய்ப்பு எட்டப்படும் போது, அதன் உறுப்புகளான தனிமனிதர்கள் சுயத்தை உணர்ந்து கேள்விகேட்டு ஒரு உளநிறைவை எட்டி அதிமனித ஆன்ம நிலைநோக்கி இயல்பில் நகர்வார்கள். கடந்த நூற்றாண்டில் இந்த அதிகாரப்பரவலாக்கத்தின் கணிசமான பகுதியை பெரியாரிய சிந்தனைப் பின்னணி கொண்ட திராவிட இயக்க அரசுகள் தமிழகத்தில் சாத்தியப்படுத்தியுள்ளன. இதன் வழி சமூகம் முழுமைக்குமான கல்வி பரவலாகியதன் அடுத்த நகர்வாக தமிழகத்தின் ஒவ்வொரு சாதிய குழுக்களும் தமக்கான உரிமைகளை தாம் வாழும் இந்த நிலப்பரப்பின் உற்பத்தி, கல்வி, அரசதிகாரம் என அனைத்திற்குள்ளும் கோரத் துவங்கியிருப்பது பெரும் சாதனை. தற்காலநிலையின், சில துவக்ககால

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘புதுவைப் பெரியார் சிந்தனையாளர் இயக்கம்’ சார்பில் கழக ஏட்டுக்கு 50 சந்தாக்கள்




பெரியாரின் ஆணையை ஏற்று ஜாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்டத்தை 1957 நவம்பர் 26ஆம் தேதி எரித்து சிறைக் கொடுமைக்குள்ளாகி மரணத்தைத் தழுவிய கருஞ்சட்டை மாவீரர்கள் நினைவாகவும் புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாள் கருத்தரங்கமும், பெரியார் சிந்தனையாளர் இயக்கம் சார்பில், 19.12.2021 அன்று மாலை 4 மணியளவில் புதுச்சேரி, அரியாங்குப்பம் ஜோதி கல்வி மய்யத்தில் நடைபெற்றது. நிகழ்வில், ஜோதி கல்வி மய்யத்தின் ஆசிரியர் மா.ச. தமிழரசன் தந்தை அய்யா சங்கரபாணி படம் திறக்கப்பட்டது.

பெரியார் சிந்தனையாளர் இயக்கத்தின் இளைஞரணித் தலைவர் சா. இலாரன்ஸ் நிகழ்விற்கு தலைமை வகித்தார். சு.ஆனந்தி, ச.தியாகு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜோதி கல்வி மய்யத்தின் ஆசிரியர் மா.ச. தமிழரசன் வரவேற்பு கூறினார். திமுக பொதுக்குழு உறுப்பினர் பா.செ.சக்திவேல் தொடக்கவுரை யாற்றினார். திராவிடர் கழக புதுச்சேரி மாநிலத் தலைவர் - சிவ. வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச் செயலாளர் சு.பாவாணன், தமிழ் மீனவர் விடுதலை வேங்கை கட்சி நிறுவனர் - இரா.மங்கையர் செல்வன், இறுதியாக திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார். பெரியார் சிந்தனையாளர் இயக்கத்தின் அமைப்பாளர் அ.ச.தீனா நிகழ்வை ஒருங்கிணைத்தார். பெரியார் படிப்பகம் பொறுப்பாளர் கு.சபரி நன்றி கூறினார். முன்னதாக பெரியாரிய குடும்பத்தின் இளைஞர்கள் சிறுவர்கள் சிலம்பாட்டம் நடத்திக் கொள்கைப் பாடல்களையும் பாடினர்.

**நிகழ்வில், கழக வார ஏட்டிற்கு 50 சந்தாக்களை கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம் பெரியார் சிந்தனையாளர் இயக்கத் தோழர்கள் வழங்கினர்.**

## தலைமைக் கழக பொறுப்பாளர்களின் அய்ந்தாம் கட்ட பயணம்

01.01.2022. சனிக்கிழமை மாலை 6.00 மணி - தூத்துக்குடி மாவட்டம்

02.01. 2022 ஞாயிறு காலை 10.00 மணி - குமரி மாவட்டம்

02.01.2022 ஞாயிறு மாலை 06.00 மணி - பாவூர்சத்திரம். நெல்லை, தென்காசி (ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டம்) மாவட்டங்கள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழப்பங்களை கடந்து அனைத்திலும் அதிகாரம் பகிரப்பட்ட உளநிறைவு கொண்ட ஒரு ஆன்மமான காந்திய சிந்தனை சமூகத்தை, ஒரு வளர்நிலையில் இந்தப்போக்கு சாத்தியப்படுத்தும். ஏனெனில், படிநிலை சமூக அமைப்புநிலையே குற்றமனநிலை உருவாக்கத்தின் மூலம். இந்த படிநிலை சமூக அமைப்பு வீழ்கையில் குற்ற மனநிலைகள் தோன்றும் வாய்ப்புத்தேவைகள் குறைந்து காந்தியம் காண விழையும் அதிமனிதர்கள் சாத்தியமாவார்கள். இதை பெரியாரியம் நடைமுறையில் தமிழ்நிலப்பரப்பில் சாத்தியப்படுத்தும் பாதைகளை நிரூபித்துள்ளது.

என்றும் நமக்கு, காந்தியிடம் உரையாட ஒரு சாத்வீகமான ஒழுங்குடைய மனம் வேண்டும். அம்பேத்கருடன் உரையாட ஒரு தெளிந்த கற்றல் வேண்டும். மார்க்ஸுடனும் புத்தருடனும் உரையாட ஒரு தத்துவார்த்த சிந்திப்பு என்ற தகுதி வேண்டும். மேற்சொன்ன எந்த தகுதிப்பாடுமின்றி எளிய வெள்ளந்தியோடு, எவரும் பெரியாருடன் உரையாடி அவருடன் முரண்பட்டு, உடன்பட்டு தெளிவு கொள்ள முடியும் என்பதாலே பெரியார்; இந்திய நிலப்பரப்பின் தனித்துவ சிந்தனையாளர் ஆகிறார்.

ஆம், பெரியார்; பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென்ற பேரறத்தை தன் சித்தாந்த ஆன்மமாக போதிக்கிறார். அதை வாழ்வியலாக்கும் சிந்தனைக் கட்டமைப்பை (School of Thought) உருவாக்கச் சொல்லி நம்மை தூண்டுகிறார். பெரியாரின் வழியில் நம் கனவு, இந்த நிலப்பரப்பின் மனிதர்கள் எல்லோருக்கும் சம வாய்ப்பு அளித்து பேரன்பு கொண்டியங்கும் ஒரு நிகர்மைச் சமூகம்.

(நிறைவு)

# புத்தெழுச்சித் தந்த ஈரோடு தெற்கு மாவட்டத் தோழர்கள் சந்திப்பு

12.12.2021 ஞாயிறு அன்று காலை 11.00 மணியளவில் ஈரோடு தெற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக தோழர்களுடனான தலைமைக் கழக பொறுப்பாளர்கள் சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் கூட்டம் சித்தோடு பகுதியில் உள்ள மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு மாவட்டச் செயலாளர் எழிலன் சுந்தரம் தலைமை வகித்தார். ஆசிரியர் ப.சிவக்குமார் கடவுள் மறுப்பு கூற நிகழ்வு தொடங்கியது. நிகழ்வின் தொடக்க வுரையாக கழக அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து அனைத்து தோழர்களும் தங்கள் கருந்துகளை தெரிவித்தனர்.

‘புரட்சி பெரியார் முழக்கம்’ சந்தா சேர்ப்பு, கழக செயல்பாட்டினை வீரியப்படுத்துவது, புதிய தோழர்களை / இளைஞர்களை உருவாக்கி, பெரியாரியல் சித்தாந்தத்தைப் பயிற்றுவித்து களத்தில் செயல்பட வைப்பது போன்றவைக் குறித்து கருந்து தெரிவித்து விவாதித்தனர்.

அதனைத் தொடர்ந்து கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி கிராமபிரச்சாரம் கொண்டு செல்வது குறித்தும் சிக்கல்கள் வராமல் பிரச்சாரம் செய்திட ஆலோசனை வழங்கினார். நிறைவாக கழக பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால்.பிரபாகரன் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழின் அவசி யத்தையும் அதனை மக்கள் மத்தியில் பிரச்சார இயக்கமாகக் கொண்டு செல்லவும், திராவிடர் இயக்கம் செய்த சாதனைகளை பட்டியலிட்டு இதற்காக இழப்புகளைச் சந்தித்த திராவிடர் இயக்கப் போராளிகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினார்.

இக்கலந்தாய்வில் மாவட்ட; தலைவர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் எழிலன், மாவட்ட அமைப்பாளர் கிருட்டிணமூர்த்தி, மாவட்ட பொருளாளர் கிருட்டிணன், மாநகர தலைவர் குமார், சத்தியமூர்த்தி, சிவக்குமார், பிரபு, கணேஷ், இந்தியப் பிரியன், விஜயரத்தினம், இராஜேஸ்வரி, கோபிநாத், செந்தில் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கரூர் மாவட்டத் தோழர்களின் சந்திப்பு

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் கழக பொறுப்பாளர்கள் மாவட்ட வாரியான தோழர்கள் சந்திப்பின் நான்காம் கட்டமாக கரூர் மாவட்ட தோழர்கள் உடனான சந்திப்பு மற்றும் கலந்துரையாடல் கூட்டம் 12.12.2021 மாலை 7.00 மணி அளவில் தெ.வெங்கிட்டாபுரம் முத்தமிழ் அரங்கில் நடைபெற்றது. தலைமைக் கழக பொறுப்பாளர்களின் பயணத்தின் நோக்கம் குறித்து அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி தொடக்கவுரையாற்றினார். தோழர்களை அறிமுகபடுத்தியும் கரூர் மாவட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக செயல்பாட்டையும் தொடர்ந்து நடைபெற உள்ள செயல்பாடுகள் குறித்தும் சின்னதாராபுரம் தோழர் சண்முகம் உரையாற்றினார். தொடர்ந்து தோழர்கள் உற்சாகமாக தங்கள் கருத்துகளை முன்வைத்தனர். அதனைத் தொடர்ந்து கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி பெரியார் முழக்கம் இதழின் அவசியம் குறித்தும் அதற்கு சந்தா சேகரிப்பது குறித்து விளக்கமளித்துப் பேசினார். நிறைவாக கழக பரப்புரைச்செயலாளர் தூத்துக்குடி பால்.பிரபாகரன் திராவிடர் விடுதலைக் கழகத்தின் பணிகள் குறித்தும் இந்த இயக்கத்தில் தோழர்கள் இணைந்து பணியாற்ற வேண்டிய அவசியம் குறித்தும் தோழர்கள் ஒவ்வொருவரும் புரட்சிப் பெரியார் முழக்கம் எனும் வார இதழை மக்களிடம் அறிமுகப்படுத்தும் வகையில் குறைந்தது 25 நபர்களிடமாவது கொண்டு செல்லும் பிரச்சார இயக்கத்தை வரும் தமிழ் புத்தாண்டு வரை தொடர்ந்திட வேண்டும் என வேண்டுகோள் விடுத்து உரையாற்றினார்.

பெரியார் முழக்க சந்தாவை விரைவுபடுத்தி டிசம்பர் இறுதிக்குள் முடிப்பது எனவும், பரப்புரை பயணங்கள் மற்றும் பயிற்சி வகுப்புகள் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. சந்திப்பின் முன்னதாக பெரியார் நினைவு சமத்துவ புரத்தில் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பனையம்பாளையம், ஒத்தமாந்துறை, சின்னதாராபுரம் பேருந்து நிலையம், தெ.வெங்கிட்டாபுரம், ராஜபுரம் பிரிவு, எல்லமேடு ஆகிய இடங்களில் கழகக் கொடியேற்றி கொள்கை முழக்கங்கள் எழுப்பபட்டன. சந்திப்பில் கழகப் பொருளாளர் திருப்பூர் சு.துரைசாமி, அமைப்புச் செயலாளர் ஈரோடு ப. ரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால்.பிரபாகரன், சின்னதாரபுரம் தி.க சண்முகம், பரமத்தி இரா.வடிவேல் ராமசாமி, தமிழன் சு.கவின் குமார், ர.ராகவன், பெ.ரமேஷ், சிலம்பம் கொ.சரவணன், பேபி வடிவேல், நிஜாமுதீன், திருமங்கலம் மணி, ஜெகதீஸ், பெ.குமரேசன், ப.அருண், ஆ. நாகராஜ், ஏமூர் மகாலிங்கம், திருப்பூர் அய்யப்பன் ஆகியோர் பங்கேற்றனர். புதிய தோழர்கள் அதிகம் பங்கேற்ற இச்சந்திப்பில் தோழர்களுக்கும் தலைமை கழக உறுப்பினர்களுக்கும் உற்சாகத்தையும் புத்துணர்ச்சியையும் அளிப்பதாக இருந்தது.

**செய்தி: அய்யப்பன் திருப்பூர்**

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஆண்டுக் கட்டணம் ரூ.250 ஆக உயர்வு

காகித விலை, அச்சுக்கான செலவுகள் அதிகரித்து விட்டதால், ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஆண்டுக் கட்டணம் ரூ.250/- ஆக தவிர்க்க இயலாத நிலையில் உயர்த்தப்படுகிறது. வாசகர்கள் தொடர்ந்து ஆதரவை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புக்கு : 7373684049

**– நிர்வாகி, ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 23rd December 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN